**நவம்பர் – 02**

# TNPSC துளிகள்

- ‘அபய்’ எனப்படுகின்ற ஆழமற்ற நீர்ப் பரப்பில் இயங்கும் ஏழாவது நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கப்பலானது (ASW SWC) சமீபத்தில் சென்னை அருகே காட்டுப்பள்ளியில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- ஜம்மு & காஷ்மீர் மற்றும் குஜராத் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூலிகைகள் குறித்த பாரம்பரியத் தகவலறிவின் பாதுகாவலர்களுக்கு மூலிகை காப்புரிமை வழங்கப் பட்டு உள்ளது.
- மும்பையில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு ஆசியாவின் கை வலு மல்யுத்தக் கோப்பை போட்டியில் ஒட்டு மொத்த அணிகளின் தரவரிசையில் இந்தியாவானது இரண்டாம் இடத்தினைப் பெற்றது.
- ஸ்பெயின் நாட்டுக் கால்பந்து வீரர்களான ரோட்ரி மற்றும் ஐடானா போன்மடி ஆகியோர் உலகின் சிறந்த கால்பந்து வீரர்களாக ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் பலோன் டி'ஓர் விருதுகளை வென்றுள்ளனர்.
- ரவிசங்கர் அமைதி மற்றும் ஒற்றுமையை வளர்ப்பதில் வாழும் கலை அறக்கட்டளை மூலமாக அவர் ஆற்றி வரும் உலகளாவியப் பணிக்காக பிஜி நாட்டின் உயரிய குடிமை விருதான "தி ஆர்டர் ஆஃப் பிஜி கௌரவ அதிகாரி" என்ற விருதினைப் பெற்றுள்ளார்.
- சைடஸ் லைப்சைன்ஸ் லிமிடெட் நிறுவனம் ஆனது ZyVac TCV எனப்படுகின்ற அதன் டைபாய்டு Vi இணை தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பிடமிருந்து கொள்கை சார் ஒப்புதலைப் பெற்றுள்ளது.
- 'பரத்வாக்யா' என்ற தலைப்பில் உருவாக்கப் பட்டுள்ள செவ்வியல் இசைக் கலைஞர் பாரத் பால்வல்லி அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைப் பிரதமர் வெளியிட்டார்.
- M.K. ரஞ்சித்சிங் "Mountain Mammals of the World" என்ற தலைப்பிலான ஒரு புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- 75வது சர்வதேச விண்வெளி மாநாடு (IAC) ஆனது இத்தாலியின் மிலன் நகரில் நடத்தப் பட்டது.
  - இந்த நிகழ்வின் கருத்துரு, "Responsible Space for Sustainability" என்பதாகும்.


# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு மாநில வாக்காளர் எண்ணிக்கை 2024

- தமிழ்நாட்டின் வாக்காளர் எண்ணிக்கையானது சுமார் நான்கு லட்சம் அதிகரித்து 6.27 கோடியாக உள்ளது.
- இவ்வாக்காளர் பட்டியலில் ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை தொடர்ந்து 11 லட்சத்துக்கும் அதிகமாக உள்ளது.
- இதில் 8,964 வாக்காளர்கள் திருநர்கள் ஆவர்.
- மாநிலத்திலேயே செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் தான் அதிக வாக்காளர்கள் உள்ளனர்.
- இதில் 3,38,183 ஆண்கள், 3,37,825 பெண்கள், 125 திருநர்கள் உட்பட 6,76,133 வாக்காளர்கள் உள்ளனர்.
- நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியானது இந்த

மாநிலத்திலேயே மிகக் குறைந்த வாக்காளர்களைக் கொண்டுள்ளது.

❖ இதில் 88,162 பெண்கள், 85,065 ஆண்கள் மற்றும் மூன்று திருநர்கள் உட்பட 1,73,230 வாக்காளர்கள் உள்ளனர்.




## பாதம் பாதுகாப்போம் திட்டம்




❖ நீரிழிவு (சர்க்கரை) நோயாளிகளுக்காகப் பாதம் பாதுகாப்போம் என்ற திட்டத்தினைத் தொடங்க தமிழக மாநில அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

- இந்த திட்டம் ஆனது நீரிழிவு நோயினால் ஏற்படும் பாத பாதிப்புகளை முன்கூட்டியே அடையாளம் காணவும், அதனால் காலை எடுக்க வேண்டிய அவசியத்தினைத் தடுக்க வேண்டியும் உதவுகிறது.
- 2336 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 299 அரசு மருத்துவமனைகள் மற்றும் 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இந்த வசதி விரைவில் கிடைக்கப்பெறும்.

# தேசியச் செய்திகள்

## BRIC-NABI




- இந்தியாவின் முதல் உயிரி உற்பத்தி நிறுவனம் ஆன BRIC-தேசிய வேளாண்-உணவு உயிரி உற்பத்தி நிறுவனம் ஆனது (BRIC-NABI) சமீபத்தில் பஞ்சாபில் மொஹாலி என்னுமிடத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- தொழில்நுட்பம் சார்ந்த வேளாண் பரிமாற்றத்திற்கான நாட்டின் பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளில் இது ஒரு முக்கியப் படிநிலையைக் குறிக்கிறது.
- இந்த நிறுவனம் ஆனது, வேளாண் உணவுத் துறையில் நிலையான, உயர் தொழில் நுட்பத் தீர்வுகளை உருவாக்குவதற்காக வேண்டி உயிரித் தொழில்நுட்பத்தை நன்குப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


## அம்ரித் உத்யான் தோட்டத்தில் கோனார்க் சக்கரம்

- கோனார்க் சக்கரத்தின் நான்கு மணற்கல் பிரதிகள் ஆனது இராஷ்டிரபதி பவனின் கலாச்சார மையம் மற்றும் அம்ரித் உத்யன் தோட்டம் ஆகிய இடங்களில் நிறுவப் பட்டுள்ளன.
- யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியத் தளமான கோனார்க் சூரியக் கோயில் ஆனது ஒடிசாவின் கோயில் கட்டிடக் கலையின் உச்சக் கட்ட அம்சமாகும்.

❖ இது சூரியக் கடவுளின் பிரம்மாண்டமான தேர் வடிவில் கட்டமைக்கப்பட்ட கோவில் ஆகும்.



## உயிரியல் பன்முகத் தன்மை விதிகள் 2024



The Biological Diversity (Amendment) Bill, 2023, is a piece of legislation aimed at amending the existing Biological Diversity Act of 2002. It seeks to simplify processes, promote the cultivation of medicinal plants, share benefits from biodiversity commerce with local communities, and decriminalize biodiversity offenses. Additionally, it aims to create a favorable environment for research, investment, and patent applications related to biodiversity.

❖ 2023 ஆம் ஆண்டு விதிகளின் திருத்தப்பட்ட சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக என்று உயிரியல் பன்முகத்தன்மை விதிகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

❖ இந்தச் சட்டம் ஆனது விரைவான ஆராய்ச்சியை எளிதாக்குவதோடு, இந்திய மருத்துவ முறைகளின் பயன்பாட்டினை ஊக்குவிக்கிறது, உயிரியல் வளங்களின் பிரிவில் அதிக வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கிறது மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆயுஷ் மருத்துவப் பயிற்சியாளர்களுக்கு விலக்கு அளிக்கிறது.

❖ இந்த விதிகள் ஆனது,

  - தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் (NBA) ஆனது தொழில்நுட்ப மற்றும் சட்ட ஆலோசனைகளை எவ்வாறு வழங்கும் என்பது குறித்தும்,
  - சட்டத்தின் விதிகளை செயல்படுத்துவதற்காக என்று மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியங்கள் அல்லது ஒன்றியப் பிரதேசப் பல்லுயிர்ப் பெருக்கச் சபைகளுக்கு

வழங்கப் படும் விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல், மற்றும்

- தேசியப் பல்லுயிர்ப் பெருக்க நிதியை நிர்வகித்தல் பற்றிய சிலபல விவரங்களைத் தருகிறது.

❖ ஆராய்ச்சி முடிவுகளின் மீதான அறிவுசார் சொத்துரிமைகளை (IPR) வழங்குவதற்கு முன், இந்த ஆணையத்திடம் பதிவு செய்து முன் அனுமதியினைப் பெறுவதற்கான ஒரு நடைமுறையையும் இந்த விதிகள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## மண்டலம் மற்றும் சாலைகள் முன்னெடுப்பிலிருந்து பிரேசில் விலகல்

❖ சீனாவின் மண்டலம் மற்றும் சாலைகள் முன்னெடுப்பில் (BRI) இருந்து விலக உள்ளதாக பிரேசில் முடிவு செய்துள்ளது.

❖ எனவே, BRICS நாடுகளுள் இந்தியாவிற்கு அடுத்தப்படியாக பல பில்லியன் டாலர்கள் மதிப்பிலான இந்தத் திட்டத்திற்கு ஆதரவளிக்காத இரண்டாவது நாடாக பிரேசில் மாறி உள்ளது.

❖ 60 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான சீன-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்திற்கு (CPEC) இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

❖ இது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாக செல்லும் ஒரு முதன்மையான BRI திட்டமாகும் என்பதோடு இது இந்தியாவின் இறையாண்மையை மீறுவதாக வாதிடப் படுகிறது.




## சால்ட் டைபூன்

❖ அமெரிக்க அதிபர் வேட்பாளர்களின் தகவல் தொடர்புச் சாதனங்களை சீன நாட்டின் கணினி ஊடுருவிகள் (ஹேக்கர்கள்) குறி வைத்துள்ளனர்.


❖ இந்த அதிநவீன ஊடுருவல் முயற்சியானது 'சால்ட் டைபூன்' எனப்படும் சீன இணைய உளவுக் குழுவால் திட்டமிடப் பட்டதாகக் கூறப்படுகிறது.

- மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இணைய வெளிப் பாதுகாப்புக் குழுவால் உருவாக்கப் பட்ட சால்ட் டைபூன் என்ற பெயரானது, சீன அரசின் நிதியுதவியினைப் பெறும் சீன கணினி ஊடுருவல் குழுவாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## மரபணு வெளிப்பாட்டின் புதிய இடஞ்சார்ந்த விதிமுறைகள்




- படியெடுத்தல் காரணிகள் என்பது நமது டிஎன்ஏவில் உள்ள தகவல்களைப் புரிந்து கொள்ள உதவும் சிறப்புப் புரதங்கள் ஆகும்.

- அவை டிஎன்ஏவின் குறிப்பிட்ட பகுதிகளுடன் இணைக்கப்பட்டு, படியெடுத்தல் எனப் படும் செயல்முறையைத் தொடங்குகின்றன என்பதோடு இது டிஎன்ஏவிலிருந்து ஆர்என்ஏவுக்கு மரபணு தகவல்களை நகலெடுக்கிறது.
- இந்தப் புதிய ஆராய்ச்சியானது, படியெடுத்தல் தொடங்கும் இடத்துடன் தொடர்பு உடைய, படியெடுத்தல் காரணி இணையும் தளத்தின் இருப்பிடத்தைப் பொறுத்து, படியெடுக்கப்படும் மரபணுவின் பல மாறுதல்களைச் சார்ந்துள்ளது என்பதை நன்கு கண்டறிந்துள்ளது.
- ஒரே படியெடுத்தல் காரணிகளின் வெவ்வேறு இடஞ்சார்ந்த அமைவுகள் ஆனது எவ்வாறு வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைப் பற்றிய நுண்ணறிவை இது வழங்குகிறது.
- இதன் கண்டுபிடிப்புகள் ஆனது, "மரபணு வெளிப்பாட்டைக் கணிக்கும் பல மரபணு செயற் கருவிகள் மற்றும் வழிமுறைகளை வகைப்படுத்திக் கண்டறிந்து செம்மைப் படுத்தவும் உதவும்".

# சுற்றுச்சூழல் செய்திகள்

## WMO பசுமை இல்ல வாயு அறிக்கை

| | $CO_2$ | $CH_4$ | $N_2O$ |
|---|---|---|---|
| 2023 global mean abundance | 420.0±0.1 ppm | 1934±2 ppb | 336.9±0.1 ppb |
| 2023 abundance relative to 1750[a] | 151% | 265% | 125% |
| 2022–23 absolute increase | 2.3 ppm | 11 ppb | 1.1 ppb |
| 2022–23 relative increase | 0.55% | 0.57% | 0.33% |
| Mean annual absolute increase over the past 10 years | 2.4 ppm $yr^{-1}$ | 10.7 ppb $yr^{-1}$ | 1.07 ppb $yr^{-1}$ |

- பசுமை இல்ல வாயுக்களின் அளவு ஆனது கடந்த இருபது ஆண்டுகளில் சுமார் 10 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்து, 2023 ஆம் ஆண்டில் ஒரு புதிய சாதனை அளவினை எட்டியுள்ளது.
- கார்பன் டை ஆக்சைட்டின் உலகளாவியச் சராசரி மேற்பரப்பு செறிவு ஆனது 420 ppm (ஒரு மில்லியனுக்கு எவ்வளவு பாகங்கள்) என்ற அளவினை எட்டியது.
- 2023 ஆம் ஆண்டில் மீத்தேன் ஆனது 1934 ppbகளையும் (ஒரு பில்லியனுக்கு எவ்வளவு பாகங்கள்), நைட்ரஸ் ஆக்சைடு 336.9 ppbகளையும் எட்டின.
- இந்த மதிப்புகள் ஆனது முறையே தொழில்துறைக்கு முந்தைய அளவினை விட (1750 ஆம் ஆண்டிற்கு முன்) 151%, 265% மற்றும் 125% அளவிலானவையாகும்.
- 2023 ஆம் ஆண்டில் வளிமண்டலத்தில் உள்ள $CO_2$ வாயுவின் அதிகரிப்பு ஆனது 2022 ஆம் ஆண்டை விட அதிகமாக இருந்தது.

- 2.3 ppm என்ற வருடாந்திர அதிகரிப்பு ஆனது, 2 ppmக்கும் அதிகமான அதிகரிப்புடன் கூடிய 12வது தொடர் அதிகரிப்பினைக் குறிக்கிறது.
- கடந்த 20 ஆண்டுகளில், $CO_2$ வாயுவின் அளவு ஆனது 2004 ஆம் ஆண்டில் பதிவு செய்யப் பட்ட 377.1 ppm அளவை விட 11.4% (42.9 ppm) அதிகரித்துள்ளது.

### அரிய இந்திய நீர் கீழிப்பான் பறவைகள்

- கீழ் மனையர் என்ற அணையில், சுமார் 150 முதல் 200 அரிய இந்திய நீர் கீழிப்பான் பறவைகள் தென்பட்டுள்ளன என்பதோடு இது தெலுங்கானாவில் தென்படுவது முதல் முறையாகும்.
- பொதுவாக, இந்தப் பறவைகள் குளிர்காலத்தில் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள காக்கிநாடா துறைமுகத்திற்கு வலசை போகின்றன.
- IUCN அமைப்பானது இந்தப் பறவைகளை அருகி வரும் பறவைகளாகப் பட்டியலிட்டு உள்ளது.




## மாநிலச் செய்திகள்

### ஆந்திரப் பிரதேசம் – மகப்பேறு விகிதத்தை அதிகரிப்பதற்கான திட்டம்

- ஆந்திரப் பிரதேச மாநிலம் அந்த மாநில மக்களை அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள ஊக்குவிக்கும் சட்டத்தை உருவாக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது.
- இது ஒரு குடும்பத்திற்கு இரண்டுக்கும் குறைவான குழந்தைகள் இருப்பது என்பது இளையோர்களின் மக்கள்தொகையில் மிகவும் விரைவான வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதைக் குறிப்பிட்டு மக்கள்தொகைப் பற்றாக்குறையை எடுத்துக் காட்டியுள்ளது.
- குறைவான கருவுறுதல் விகிதங்களால், தென் இந்திய மாநிலங்களில் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவது குறித்த கவலைகள் எழுந்துள்ளன.
- குறிப்பாக தென் மாநிலங்களில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களின் சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- அவை தனது சக வட மாநிலங்களை விட குறைவான கருவுறுதல் விகிதங்களைக் கொண்டுள்ளன.

- 20 ஆண்டுகளுக்கும் மேலாக, ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்கு அடுத்தபடியாக, அடுத்த ஆண்டு மட்டுமே, உத்தரப் பிரதேசம் மாற்று (ஈடு) நிலை கருவுறுதல் விகிதத்தினை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2011 மற்றும் 2036 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் மக்கள் தொகையானது 31.1 கோடி அதிகரிக்கும் என்ற நிலையில் இந்த வளர்ச்சியில் தென் மாநிலங்களின் பங்கு சுமார் 2.9 கோடியாக மட்டுமே இருக்கும்.
- இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்கள் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்ற விதியையும் ஆந்திரப் பிரதேசம் சமீபத்தில் ரத்து செய்தது.


TFR IN STATE AMONG LOWEST

| State | Total fertility rate (TFR) |
|---|---|
| Tamil Nadu | 1.4 |
| West Bengal | 1.4 |
| Delhi | 1.4 |
| Telangana | 1.5 |
| Punjab | 1.5 |
| Maharashtra | 1.5 |
| Kerala | 1.5 |
| Jammu & Kashmir | 1.5 |
| Karnataka | 1.6 |

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## K.S.புட்டசாமி



- கர்நாடக உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதியும், 'தனியுரிமை' வழக்கின் முதன்மை மனுதாரருமான நீதிபதி K.S.புட்டசாமி அவர்கள் பெங்களூருவில் காலமானார்.
- 1986 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற பிறகு, மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் பெங்களூரு அமர்வின் முதல் துணைத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார்.

- ஆந்திரப் பிரதேசத்தின் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராகவும் அவர் பணியாற்றினார்.
- 2012 ஆம் ஆண்டில், அவரது 86வது வயதில், ஆதார் திட்டத்தை எதிர்த்து வழக்குத் தொடுத்த முதல் நபர்களில் ஒருவராக நீதிபதி புட்டசாமி இருந்தார்.
- இது 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வானது, நீதிபதி K.S. புட்டசாமி (ஓய்வு) மற்றும் இந்திய ஒன்றியத்திற்கு இடையிலான வழக்கில் தனியுரிமையினை ஒரு அடிப்படை உரிமையாக அங்கீகரித்து ஒரு மனதாக தீர்ப்பு வழங்கிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்விற்கு வழிவகுத்தது.

# முக்கிய தினங்கள்

## ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் - அக்டோபர் 28 முதல் நவம்பர் 03 வரை




- இது ஊழல் தடுப்பு விழிப்புணர்வைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகிறது மற்றும் பொது நிர்வாகத்தில் நேர்மையினை நிலை நிறுத்துவதில் ஒவ்வொருவரின் உறுதிப்பாட்டினை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.
- இந்த வார அளவிலான அனுசரிப்பிற்கான கருத்தாக்கம் ஆனது, முதன்முதலில் 2000 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Culture of Integrity for Nation's Prosperity" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★